**நீர் வளச் சபை - 2019**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நீர் வளச் சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிறுவனத்தை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம்

தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு நோக்கெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது சபையின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பிடப்பட்ட அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித்தகைமையை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் செய்தல் மற்றும் வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் தொடர்பான நியாயமான உறுதிப்பாட்டை பெறுவதற்குப் போதிய‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனம் பேணுதல் அவசியமாகும். பொதுப்பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சான்று, கொடுப்பனவு உறுதிச்சான்று ஆகிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்படுதல் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் இறுதிக் கையிருப்பு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 9 க்கமைய கிரயம் அல்லது நிகர தேறத்தகு பெறுமதி என்பவற்றில் எது குறைவானதோ அப் பெறுமதியிலேயே காட்டப்பட வேண்டுமாயினும், பயன்படுத்தப்படாது அப்புறப்படுத்தப்பட்ட இயந்திரங்களுக்கு ரூபா 4.31 மில்லியனுக்கான உதிரிப் பாகங்களினது கையிருப்பினது நிகர தேறத்தகு பெறுமதியைக் கணிப்பிடாது அதன் கிரய அடிப்படையிலான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | துளைக்கும் இயந்திரத்தை சபை பெறும்போது அவற்றுடன் உதிரிப் பாகங்களும் பெறப்பட்டிருந்தன. அவை சந்தையில் சுலபமாகப் பெறப்பட முடியாதன ஆகும். ஆகவே, நிகரத்தேறத் பெறுமதியைக் கணிப்பது இயலாதுள்ளது. மேலும், இந்த உதிரிப்பாகங்கள் அந்த இயந்திரத்தின் பயன்பாட்டிற்கு உரியனவாகும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் தவறைத் திருத்துவதற்கு மீளாய்வாண்டின்போது முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களுக்கு ரூபா 3.13 மில்லியன் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 க்கமைய அச்சீராக்கல் தற்றுணிபுடன் சீராக்கல் செய்யப்பட்டு முன்னைய ஆண்டின் ஒப்பீட்டுத் தகவல்களை மீண்டும் அறிவித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்படாததுடன் குறித்த சீராக்கல்களது விபரமும் தெரிவிக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டினது கணக்குகள் சமர்ப்பிக்கப்படும்போது மீண்டும் அறிவிக்கப்பட்ட கூற்றாக (RESTATED) சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையை ஆரம்பிப்பதற்கென அரசாங்க மூலதனம் வழங்கப்பட்டிருந்தது. 01 ஆம் இலக்க பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அந்த மூலதனப் பங்களிப்பை இனங்கண்டு அதனை நிதிக்கூற்றுக்களில் காட்டவில்லை. அதற்குப் பதிலாக, திரண்ட நிதியம் ஆக (Accumulated Fund) ரூபா 256 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மூலதனப் பங்களிப்பு 2020 தொடக்கம் அரசாங்க மானியமாக நிதி நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | துளையிடும் 6 இயந்திரங்களது 03 ஆண்டுகளுக்கு முன்னரான ஆகு செலவு ரூபா 5.8 மில்லியனாகும். இவை பயன்படுத்தப்படாது அகற்றப்பட்டிருந்தபோதும், அந்த இயந்திரங்களது பெறுமதியைக் கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்காது இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களாக நிதிக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட துளையிடும் இயந்திரங்களில் 3 கைதவிர்ப்புக்காகத் தரித்து வைக்கப்பட்டு உள்ளன. ஏனைய 3 துளையிடும் இயந்திரங்களும் பழுதுபார்த்தலுக்கென இரத்மலானை வேலைத் தளத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. | பயன்படுத்தப்படாது அகற்றப்பட்ட சொத்துக்களின் கிரயத்தை நிதிக் கூற்றுக்களில் நீக்கி விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிர்மாண வேலை முடிவடைந்திருந்த 03 நிலுவைகளது பெறுமதியான ரூபா 4.98 மில்லியன் மீளாய்வாண்டில் வருமானத்தில் இடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டில் நிறைவடைந்த 3 குழாய்க் கிணறுகளுக்கு அந்த ஆண்டிலேயே இன்வொய்சு வழங்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கைப் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தங்களது பெறுமதி தவறில்லாது கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியன

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இருந்த ரூபா 20,502,733 கடன்பட்டோர் மீதியில் ரூபா 7,603,424 ஓராண்டிற்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த கடன் மீதியாகும். அக்கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | ஓராண்டிற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதியைத் தீர்வு செய்வதற்குத் தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கடன் மீதியை அறவிடுவது நாளதுவரையாக்கப் பட வேண்டும். |

### 1.6.2 கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தனி நபர்களிடமிருந்தும் 96 நிறுவனங்களிலிருந்தும் சேவைகளை நிறைவேற்றுவதற்குப் பெறப்பட்ட சேவை முற்பணம் ரூபா 14,174,980 ஆகும். இதில் ரூபா 179,626 ஓராண்டிற்கு மேற்பட்டிருந்தது. குறித்த பணியை நிறைவேற்றுவதற்கு 2019 டிசம்பர் 31 ஆந் திகதியன்றும் சபை தவறியிருந்தது. | பல்வேறு சேவைகளை நிறைவேற்றுவதற்கு பெறப்பட்ட முற்பணத்தைத் தீர்வு செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ஓராண்டிற்கு மேற்பட்ட ரூபா 179,626,000 மீதியையும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த பணி முடிவடைந்த முற்பணம் வருமானமாகக் கணக்கிலிடப் படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104 | முன்னைய ஆண்டிலிருந்து தொடர்ந்து வரும் ரூபா 118,000 கையிருப்புக் குறைவு சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 104 க்கமைய நடவடிக்கை | கையிருப்புக் குறைவாக உள்ள ரூபா 118,000 மீதி தொடர்பான விசாரணை தற்போது பெருமளவு பூர்த்தியாகி உள்ளது. ஆகவே, இவ்வாண்டில் | குறைவு தொடர்பாக 104 ஆம் நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | எடுக்கப்படவில்லை. | அதனைத் தீர்வு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) | 2017 மார்ச் 16 ஆந் திகதிய 2010/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | i. | கமத்தொழில் நடவடிக்கைகளுக்கென நிர்மணிக்கப்பட்ட 4 மீட்டர் அல்லது அதற்குக் கூடிய சுற்றளவு உள்ள பயிர்ச் செய்கைக்கான கிணறு, வணிகமய கமத்தொழில் நடவடிக்கைகளுக்கும் கைத்தொழில் தேவைகளுக்கும் நிர்மாணிக்கப்பட்ட குழாய்க் கிணறுகள் என்பவற்றிற்கு நீர்வழங்கல் சபையின் அங்கீகாரம் பெறப்படவில்லை. மேலும், குழாய்க் கிணறுகளை நிர்மாணிக்கும் சகல நிறுவனங்களும் சபையில் பதிவு செய்யப்பட வேண்டுமாயினும், சில நிறுவனங்கள் அவ்வாறு பதிவு செய்யப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். 2017 மார்ச் 16 ஆந் திகதிய 2010/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் குழாய்க்கிணறு நிர்மாணிப்பதை ஒழுங்குபடுத்தும் ஆரம்ப நடவடிக்கைகள் அந்த ஆண்டிலேயே ஆரம்பமாகியது. அதற்கமைய, குழாய்க் கிணறை நிர்மாணிக்கும் வெளி நிறுவனங்களைப் பதிவு செய்தல், நிர்மாண வேலை ஆரம்பிப்பதற்கு முன்னரே புவிச்சரிதவியல் பரிசோதனையை மேற்கொண்டு அறிக்கையை நீர் வழங்கற் சபைக்குச் சமர்ப்பித்து தேவையான அங்கீகாரத்தைப் பெறுதல், தொழில்நுட்பத் தரவுகளை நீர் வழங்கற் சபையின் பிரதான தரவுக் களஞ்சியத்தில் பெறுவது போன்ற ஆரம்ப நடவடிக்கைகள் நடைபெற்றன. | 2017 மார்ச் 16 ஆந் திகதிய 2010/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | ii. | வணிகமய கைத்தொழிலுக்கு அல்லது கைத்தொழிலுக்கு மாதாந்தம் 30,000 மீட்டர் நிலத்தடி நீரைப் பெறும் சகல செயற்திட்டங்களுக்குமான நீர்த் | பெறுவதை உள்ளடக்கிய ஆரம்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், இது தொடர்பான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் நடைபெறும்போது கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட | |

| | | |
|---|---|---|
| | தோற்றுவாய் சம்பந்தமான நிலைமை அறிக்கை வழங்கப்படவில்லை. | விடயங்கள் தீவிரமாகக் கருத்திற் கொள்ளப்படும். அறிமுகம் செய்யப்பட்ட ஒழுங்குபடுத்தல் கோட்பாடுகள் மேலும் முறைப்படுத்தப் படுவதற்கான விதிமுறைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. |
| iii. | வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் தொடர்புடைய பகுப்பாய்வு அறிக்கையை அங்கீகாரத்திற்காக நீர் வள சபைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | |
| iv. | வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் நாளாந்தம் பெறப்படும் நீரின் அளவு தொடர்பான தரவுகள் பேணப்பட வேண்டுமாயினும், சில தனியார் நிறுவனங்கள் அவ்வாறு நடவடிக்கை எடுத்திராததுடன், சபையும் அது தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வில்லை. | |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 41,201,000 மிகை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 33,658,000 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 7,543,000 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டின் வருமானத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 54,992,000 குறைந்திருந்தபோதும், அதற்கு ஒப்பாக ஆண்டிற்கான செலவினம் முன்னைய ஆண்டை விட ரூபா 62,545,000 குறைவடைந்தமை இந்த அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களது போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 35,251,000 குறைவடைந்திருந்தது. அது 84.76 சதவீதமாகும்.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

**விகித வகை**

| திரவவியல் விகிதம் | 2019 | 2018 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 11.06 | 6.25:1 |
| துரித விகிதம் | 5.48 | 3.16:1 |

சபையானது தனது செயற்பாட்டு நடவடிக்கைகளின் தன்மைக்கேற்ப இருக்க வேண்டிய பொருத்தமான தொழிற்படு மூலதனத் தேவை தொடர்பாக மதிப்பாய்வை மேற்கொண்டு பொருத்தமான தொழிற்படு மூலதன முகாமைத்துவ விதிமுறையை அறிமுகம் செய்திருக்கவில்லை. இதற்கமைய, மீளாய்வாண்டின்போது 1 நடைமுறைப் பொறுப்பைத் தீர்வு செய்வதற்கு 11.06 நடைமுறைச் சொத்துக்கள் பேணப்பட்டிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நீர் வள சபைக்குச் சொந்தமான 30 வாகனங்கள் சம்பந்தமாக வாகன இணைப்பு இயந்திரங்களை வழங்கி அவற்றைப் பொருத்துவதற்கு ரூபா | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இந்த வாகனங்களது இணைப்பு இயந்திரங்களைப் பொருத்திய நிறுவனத்திற்கு இதுவரை கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கைப் பிரகாரம் ஒப்பந்தகாரரின் மூலம் குறித்த வேலையை நிறைவேற்ற |

| | | | |
|---|---|---|---|
| | 1,419 மில்லியன் பெறுமதியான உடன்படிக்கை 2019 செப்டம்பர் 18 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த இயந்திரங்கள் 2019 ஒக்டோபர் 02 ஆந் திகதியளவில் பொருத்தப்பட வேண்டியிருந்த போதும், 2020 யூன் 18 ஆந் திகதியன்றும் குறித்த மாதிரி வடிவத்திற்கமையப் பொருத்தப்படாதிருந்தன. ஒப்பந்தகாரர்கள் உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக 2020 யூன் 20 வரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | மொறட்டுவை பல்கலைக்கழக இலக்டிரொனிக் அறிவு உள்ள ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான நீர்வள சபையின் தலைமை அலுவலகக் காணி, நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான இரத்மலானை இயந்திரவியல் வேலைத்தளம் அமைந்துள்ள காணி, அலுத்நுவர பிரதேச செயலாளருக்குச் சொந்தமான அநுராதபுரம் அலுத்துவரையில் அமைந்துள்ள சுற்றுலா விடுதிக்குரிய காணி என்பவற்றை சுவீகரிப்பதற்கு நீர்வள சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | நீர்வள சபையின் தலைமை அலுவலகக் காணி அரசாங்கத்திற்குச் சொந்தமான காணி ஆகும். திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரால் நீர்வள சபை அலுவலகக் காணியை ஒப்படைக்க இயலாது எனவும் குறுகிய கால குதத்தை அடிப்படையில் வழங்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இரத்மலானை இயந்திரவியல் வேலைத்தளம் உள்ள காணி அடங்கலாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ மனைத் தொகுதியும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீடமைப்புச் செயற்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதால் அதற்கு மாற்றீடாக வேறு | சுவீகரிக்கப்படாத சொத்துக்களைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒரு காணியை வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அனுராதபுரம் சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணி நெடுங்கால அடிப்படையில் நீர்வள சபைக்கு வழங்கப்படுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. | |
| (இ) | நீர்வள சபையின் மாகாண அதிகாரத்துக்குட்பட்ட இடத்தில் நீர்வளச் சபையின் அங்கீகாரத்துடன் நிர்மாணிக்கப்பட்ட கிணறுகள் சம்பந்தமாக அந்தக் கிணறுகள் அமைந்துள்ள பிரதேசத்தைத் தெளிவாக இனங்கண்டு கொள்ளக் கூடியவாறு (GPS) தொகுதி இலக்கத்துடன் கூடிய வரைபடம் நிறுவப்படவில்லை. அக்கிணறுகள் தொடர்பான தகவல்களடங்கிய தரவு முறைமையும் நிறுவப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். புத்தளம் மாகாண அலுவலகத்திடம் அதிகாரத்துக்குட்பட்ட அப்பிரதேசத்தில் குறித்த குழாய்க் கிணறுகளை இனங்காணக் கூடியவாறு கணனியுடன் இணைந்த வரைபடத்தைத் தயாரிப்பதற்கும் பொதுவாகப் பரிசீலிக்க வசதியாக குறித்த தரவுகளை நீர்வள சபையின் வெப் இணையத்தளத்திற்கு வழங்குவதற்கும் இயன்ற வரை அலுவலக வளாகத்தில் காட்சிக்கு வைப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. நீர்வள சபைக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட புவியியல் விஞ்ஞான உத்தியோகத்தர்களும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் காரணமாக இந்த நடவடிக்கை ஓரளவு தாமதமாகலாம். | நீர்வள சபையில் பதிவு செய்யப்பட வேண்டிய கிணறுகள் அமைந்துள்ள பிரதேசத்தைத் தெளிவாக இனங்காணும் பொருட்டு GPS தொகுதி இலக்கத்துடன் கூடிய வரைபடம் ஒன்றை மாகாண அலுவலகத்தில் நிறுவி கிணறுகள் சம்பந்தமான தகவல்கள் அடங்கிய தரவு பேணப்பட வேண்டும். |

**3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பன**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை ரூபா 2,640 மில்லியனுக்குக் கொள்வனவு செய்த 11 மின் உற்பத்திச் சாதனங்களும் ரூபா 2,250 மில்லியனுக்குக் | ஏற்றுக் கொள்கின்றேன். கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டவாறு தற்போது பயன்படுத்தப்படாதிருக்கும் இரத்மலானைக் களஞ்சியத்தில் உள்ள | சொத்துக்கள் வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப் படுவதற்கான நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்த 03 மின்உற்பத்திச் சாதனங்களும் 03 ஆண்டுகளுக்கு அதிகமாக எதுவித பயனுமின்றி களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. மேலும், அந்த இயந்திரங்களது உத்தரவாத காலமும் முடிவடைந்திருந்தன. அந்த இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான மாற்று வழிகளில் கவனம் செலுத்தப்படவில்லை. | மின்உற்பத்திச் சாதனங்களும் நீர்ப் பம்புகளும் கடந்த கால வெள்ள இடர்களின்போதும் அதற்கு முன்னரான இடர்களின்போதும் சபைக்கு அவசர இடர் நடவடிக்கை தொடர்பாக வழங்கப்பட்டதுடன், அவற்றின் ஆரம்ப பெறுமதியை மதிப்பீடு செய்து அமைச்சினதும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினதும் நீர்வள சபையினதும் அங்கத்தவர்களை உள்ளடக்கிய குழுவின் மூலம் பயன்படுத்தக்கூடிய ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கவும் செயலற்றிருக்கும் பொருட்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சினது நிதி ஏற்பாட்டிலிருந்து 2017 மே 31 ஆந் திகதியன்று நீர்வள சபையின் பயன்பாட்டிற்கு 50 நீர்ப் பம்புகள் ரூபா 8.94 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் உத்தரவாதக் காலம் 02 ஆண்டுகளாகும். மீளாய்வாண்டின் இறுதியளவில் 50 நீர்ப் பம்புகளில் 06 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன. 44 நீர்ப் பம்புகள் உத்தரவாதக் காலத்தினுள் பயன்படுத்தப்படாது களஞ்சியத்திலேயே இருந்தன. அந்த இயந்திரங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக மாற்றுவழிகளில் ஈடுபடவில்லை. அவ்வாறே, 2009 ஆம் ஆண்டில் சமூக | ஏற்றுக் கொள்கின்றேன். கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டவாறு தற்போது பயன்படுத்தப்படாது உள்ள மின் உற்பத்திச் சாதனமும் நீர்ப் பம்பும் கடந்த வெள்ள இடர்களின்போதும் அதற்கு முன்னரான இடர்களின்போதும் சபைக்கு அவசர இடர் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன் அவற்றினது ஆரம்ப பெறுமதியை மதிப்பீடு செய்து அமைச்சினதும் ஆரம்ப பெறுமதியை மதிப்பீடு செய்து அமைச்சினதும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினதும் நீர்வள சபையினதும் அங்கத்தவர்களைக் கொண்ட குழுவின் மூலம் அவற்றைப் பயன்படுத்தக் கூடிய ஏனைய நிறுவனங்களிடம் அவற்றை ஒப்படைக்கவும் செயலற்றிருக்கும் | சொத்துக்கள் விளைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவைகள் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஐம்பது 1 ½ அங்குல நீர்ப்பம்புகள் பயன்படுத்தப்படாதும் அந்த இயந்திரங்கள் செயலற்றவையா, அல்லவா என்பதைப் பரிசீலிக்காதும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | பொருட்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | சபையிடம் பயன்படுத்தக் கூடிய பல துளையிடும் இயந்திரங்கள் பயனற்று இருக்கையிலும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குழாய்க் கிணறுகளை நிர்மாணிக்கும் வேலை குறைவடைந்திருந்தும் நிலைமையைக் கருத்திற் கொள்ளாது அமைச்சினது நிதியேற்பாட்டின் மூலம் ரூபா 280 மில்லியன் செலவில் மீளாய்வாண்டில் புதிய துளையிடும் இயந்திரங்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த துளையிடும் இயந்திரங்களும் ஏறக்குறைய 08 மாதங்களாக பயனற்றிருந்தன. | நீர்வள சபையிடமுள்ள துளையிடும் இயந்திர சாதனங்கள் மிகப் பழைமை வாய்ந்தவை ஆகும். அடிக்கடி பெருமளவு செலவில் அவற்றைப் பேண வேண்டியுள்ளது. இக்காரணங்களால் நீர்வள அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு ரூபா 280 மில்லியனுக்கான இப்புதிய துளையிடும் இயந்திரங்களை நீர்வள சபை பெற்றுள்ளது. 2019 மார்ச் மாதத்தில் மேற்படி துளையிடும் இயந்திரங்கள் பெறப்பட்டபோதும், தொழில்நுட்ப சாத்தியக்கூறை உறுதி செய்தல், பொருட் கொள்வனவு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல், பதிவு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவற்றால் தாமதம் ஏற்பட்டது. | சொத்துக்கள் அதிகூடிய ஆக்கபூர்வத் தன்மையுடனும் வினைத்திறனுடனும் பயன்படுத்தப் படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | புத்தளம் நீர் பரிசோதனைக் கூடத்தில் நிறுவப்பட்டுள்ள நுண்ணுயிரியல் ஆய்வு கூடத்தில் (Micro biology Laboratory) உலர் பாதுகாப்பு மற்றும் நீர்வளத் திட்ட செயற்திட்டத்தின் | இக்காலப்பகுதியின்போது நுண்ணுயிரியல் பரிசோதனையை நாடும் சேவை நாடுநர் மிகக் குறைவாக இருந்ததுடன், நுண்ணுயிரியல் பரிசோதனையை மேற்கொள்ள நிரந்தர நீர் | சொத்துக்களை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மூலம் வழங்கப்பட்ட 05 வகை ஆய்வுகூட உபகரணங்களது 06 கூறுகள் 06 ஆண்டுகளுக்கு மேலாகப் பயனற்றிருந்தன. 2014 டிசம்பர் தொடக்கம் ஆய்வு கூடம் அறிக்கை எதனையும் சமர்ப்பித்திருக்கவில்லை. | பகுப்பாய்வாளர் ஒருவர் இருக்கவுமில்லை. எவ்வாறாயினும், அந்த உபகரணங்கள் செயற்படுமாறிருக்கத் தேவையான பராமரிப்பு வேலைகள் நடைபெற்றன. தேவையான பதவியணியினர் ஆட்சேர்க்கப்படும் வரைஅனுராதபுரம் மாகாண அலுவலகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய ஆய்வுகூடக் கூட்டுத் தொகுதியிடம் உபகரணங்களை ஒப்படைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 64 பதவிகளுக்கு 413 பேர் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், அதில் 46 பதவிகளுக்கான 140 வெற்றிடங்கள் நிலவின. இவ்வெற்றிடங்கள் பல ஆண்டுகளாக உள்ளபோதும் 2020 யூன் மாதமளவிலும் ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்று அதன் பின்னர் ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2019 சனாதிபதித் தேர்தல் 2020 பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றால் ஆட்சேர்ப்பு இடை நிறுத்தப்பட்டுள்ளது. | முறையான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்பட்டு உத்தியோகத்தர் களை ஆட்சேர்க்க வேண்டும். |

## 4. பொருட் கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நீர் வள சபை எய்தக் கூடிய நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டிருந்த போதும், | நிலைத்து நிற்கவல்ல நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நீர்வள சபையால் அடையப் பெற்ற நோக்கங்கள் பிரதானமாக நிலத்தடி நீர் வளத்தை தீவடங்கிலும் பரவச் செய்தல், பரிசோதனை மற்றும் முகாமைத்துவம் | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அவற்றிற்குரிய இலக்குகள், தரவுகள் மற்றும் இலக்கை அடையும் |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றுடன் தொடர்புடைய இலக்குகள், அடிப்படைத் தரவுகள், இலக்கை எய்துவதற்கான வழிவகைகளை அளவிடுவதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | என்பவற்றை சான்றுறுதிப்படுத்தும் அடிப்படையில் அமைந்தனவாகும். சபையின் முன்னைய ஆண்டுகளின் போதான அனுபவம் மற்றும் அது தொடர்பான இலக்கு, அடிப்படைத்தரவு, முன்னேற்றம் ஆகியவற்றை அளவிடுவதற்குரிய இடைப்பட்ட இலக்கைப் போன்றே பிரதான முன்னேற்றச் சுட்டும் (KPI) சபையின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அதற்கமைய குறித்த செயற்திட்டங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. இந்நடவடிக்கைகளை மென்மேலும் முறைப்படுத்துவதற்கு கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் பௌதீக மற்றும் மனிதவளத்தை வழங்குவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வழிவகைகள் என்பவற்றை அளவிடுவதற்கான சுட்டிகளை சரிவர இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துவது சம்பந்தமாக நீர்வள சபையின் பணிகளில் அக்கறை செலுத்தும் தரப்பினராக சுற்றாடல் அமைச்சு, தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை, புரிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், இடர் முகாமைத்துவ அமைச்சு, நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய தரப்பினர் இனங்காணப்பட்டுள்ள | சபையன் கடமைகள் சம்பந்தமாக தொடர்புடைய சுற்றாடல் அமைச்சு, தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் இடர் முகாமைத்துவ அமைச்சு, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினருடன் சபை எப்போதும் சேர்ந்து நடவடிக்கை எடுப்பதுடன், சபையின் கடமைகளைத் திட்டமிடுகையில், | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்திக்கான பங்குபற்றலை சக்திமிக்கதாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதும், நிறுவனத்திற்குரிய இலக்கைத் தயாரிப்பதில் பங்களிப்பு நிரூபணமாகாதிருப்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | விசேடமாக நீர்ப்பாசன மற்றும் நீர் வள மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்படும் குறிக்கோள்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. மேலும், நீர் வள சபை அதிகாரச் சட்டத்திற்கிணங்கத் தேவையான அரச நிறுவன ஒருங்கிணைப்புக்காக முன்மொழியப்பட்ட திணைக்கள ஆலோசனைக் குழுவானது 2017 தொடக்கம் கூட்டங்களை நடாத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | |
| (இ) | எந்தவொரு பணியினதும் சரியான செயலாற்றலை அளவிடுவதற்கு சரியான தரவு அடிப்படையாகக் கொள்ளப்படுவது அத்தியவசியமானபோதும், சபையானது நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தியினது இலக்கை அளவிடுவதற்கு சரியான தரவுடைய அடிப்படையை உருவாக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. நிதி ஏற்பாட்டில் பற்றாக்குறை, பௌதீக வசதிகள் போதியளவு இல்லாமை, பயிற்றப்பட்ட ஊழியர் இல்லாமை இதற்கான காரணங்களாகும் என மேலும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக தீவிர கவனம் செலுத்தப்பட்டு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அதிகரிக்கப்படும். இதற்கென நெடுங்காலத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தியை அடைவதற்குரிய தரவுகளைச் சேகரித்து மதிப்பாய்வு செய்ய வேண்டும். |